

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டை வட்டம் சமாதானபுரம் டாக்டர். அம்பேத்கார் நகரில் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் ரூபாய் 53.19 கோடி மதிப்பீட்டில் 408 அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டுவதற்கான பணிகளை சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு, ஞானதிரவியம் எம்.பி., மு.அப்துல்வஹாப் எம்.எல்.ஏ. மாவட்ட ஆட்சியர் கார்த்திகேயன், மேயர் சரவணன், துணை மேயர் ராஜ் ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்தார்.உடன் கழக நிர்வாகிகள் சித்திக்,கனகராஜ், பவுன்ராஜ், பி.சி.ராஜன், ஜோசப்பெல்சி உள்பட அரசு அலுவலர்கள் உள்ளனர்.






நாகை மாவட்டம் நாகை துறைமுகத்தில் இருந்து இலங்கை காங்கேசன்துறைக்கு 40 ஆண்டுகளுக்கு பின் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் முயற்சியால் நேற்று முன்தினம் கப்பல் (படகு) போக்குவரத்து தொடங்கியது. நாகை துறைமுகத்தில் நடைபெற்ற விழாவில் நெடுஞ்சாலை துறை அமைச்சர் எ.வ.வேலு , சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி, ஒன்றிய துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் துணை அமைச்சர் சர்பானந்தாசோனாவால், நாகை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.செல்வராஜ் மற்றும் அரசு துறை அதிகாரிகள் கொடி அசைத்து வைத்து கப்பல் போக்குவரத்தை தொடங்கி வைத்தார்கள்.




நெல்லை கிழக்கு மாவட்டம் அம்பாசமுத்திரத்தில் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு விவசாய அணி, விவசாயத் தொழிலாளர் அணி சார்பில் விவசாயிகள் கருத்தரங்கம் மாவட்ட ஊராட்சிக் குழு உறுப்பினர் அருண் தவசு பாண்டியன் தலைமையில் மாவட்ட நிர்வாகிகள் நடராஜன், பாபநாசம், ஆறுமுகம், பூதப்பாண்டியன், சண்முகவேல், சுடலைமுத்து, ஐயப்பன், வெங்கடேசன், ராமசாமி, கருப்பசாமி, தனகி ரூபா, முத்துக்குமார், நாராயணன், முத்துராமலிங்கம், சுபாஷ், நாகமணி, சங்கரநாராயணன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பன் பங்கேற்று கருத்துரை வழங்கினார்.உடன் மாநில விவசாயத் தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், அம்பை நகரச் செயலாளர் பிரபாகர பாண்டியன், வி.கே.புரம் நகரச் செயலாளர் கணேசன், ஒன்றியச் செயலாளர் பரணி சேகர், மாவட்ட துணைச் செயலாளர் மைக்கேல், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் மாடசாமி, தொழிலாளர் அணி அமைப்பாளர் ராஜா, துணை அமைப்பாளர் முத்துப்பாண்டி ஆகியோர் உள்ளனர்.



கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்கு உட்பட்ட நெசவாளர் காலனி, பாரதி தெரு, ஏசுபக்தன் தெரு, சைமன் நகர், 5வது குறுக்கு தெரு, கே.பி. ரோடு, கிறாஸ் தெரு ஆகிய பகுதிகளில் ரூ. 46.52 இலட்சம் மதிப்பீட்டில் சாலை அமைக்கும் பணிகளை கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர் – நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ. மகேஷ் துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் நாகர்கோவில் மாநகராட்சி இளநிலை பொறியாளர் ராஜா, மண்டல தலைவர்கள் ஜவகர், செல்வகுமார், மாமன்ற உறுப்பினர்கள் செல்வி. கௌசிகி, திருமதி. சிஜி பிரவின், தி.மு.க. மாநகரச் செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், பகுதி செயலாளர்கள் துரை, சேக் மீரான் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




நாள்: 15.10.2023 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணி
இடம்: கிரசன்ட் மைதானம், அண்ணாநகர்

சென்னை மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில்
முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின்
நூற்றாண்டு விழா முன்னிட்டு
நே.சிற்றரசு M.A.,M.Phil
மாவட்ட செயலாளர், சென்னை மேற்கு மாவட்டம்
அவர்களின் தலைமையில் நடைபெறும்
1000–நபர்களுக்கு கல்வி உதவித் தொகை மற்றும்
நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா
வருகை தரும்...
இளைஞர்களின் எழுச்சி நாயகன்
மாண்புமிகு.
உதயநிதி ஸ்டாலின்
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்
அவர்களை வருக! வருக!! என வரவேற்கின்றோம்...

தயாநிதி மாறன் MP.
கழக விளையாட்டு மேம்பாட்டு அணி செயலாளர்
அன்பகம்கலை
கழக அமைப்பு இணை செயலாளர்
மருத்துவர் நா.எழிலன் MLA.
கழக மருத்துவ அணி செயலாளர்
எம்.கே.மோகன் MLA.
தலைமை செயற்குழுஉறுப்பினர்
ந.இராமலிங்கம் MC. எஸ்.மதன்மோகன் MC. ARP.M.காமராஜ் MC.
ச.பரமசிவம் வினோத் வேலாயுதம்
நுங்கை வி.எஸ்.ராஜ் கலைகதிரவன்

மற்றும் கழக உடன்பிறப்புக்கள் அனைவரையும்
வருக! வருக!! என அன்புடன் வரவேற்கும்.
மா.பா.அன்புதுரை
பகுதி செயலாளர்
ஆயிரம்விளக்கு கிழக்கு பகுதி தி.மு.க